செய்தி வெயிடு எண்.12/2021 நாள் 21.06.2021

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு, மருத்துவ கல்வி மற்றும் குடும்ப நலன் துறை அமைச்சர் திரு மா.சுப்ரமணியன் அவர்கள் மற்றும் சேப்பாக்கம் . திருவல்லிக்கேணி சட்ட மன்ற உறுப்பினர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை குடிநீர் வாரியத்திலுள்ள கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை இயந்திரங்கள் கொண்டு அகற்றும் பணிகளை துவக்கிவைத்து பார்வையிட்டார்கள்.**

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் பகுதி 1 முதல் 15 வரை மக்கள் நெருக்கம் மிகுதியாக உள்ள தெருக்களில் அமைந்துள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை பருவமழைக்கு முன்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முழுமையாக துார்வாருதல் மற்றும் பராமரிப்பு பணிகளை 21.06.2021 முதல் 30.06.2021 வரை 10 நாட்கள் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளை வாரியத்தின் 254 துார்வாரும் இயந்திரங்கள் 142 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 54 கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் ஆக மொத்தம் 454 இயந்திரங்கள் முலம் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை அகற்றி வருகிறது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு, மருத்துவ கல்வி மற்றும் குடும்ப நலன் துறை அமைச்சர்

திரு மா.சுப்ரமணியன் அவர்கள் இன்று (21.06.2021) சென்னை சைதாப்பேட்டை பகுதியில் சென்னை குடிநீர் வாரியத்திலுள்ள கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை இயந்திரங்கள் கொண்டு அகற்றும் பணிகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்ட மன்ற உறுப்பினர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவல்லிக்கேணி வெங்கடரங்கம் பிள்ளை தெருவில் உள்ள சென்னை குடிநீர் வாரியத்திலுள்ள கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை இயந்திரங்கள் கொண்டு அகற்றும் பணிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இத்துடன் புகைப்படமும் இணைக்கப்பட்டுள்ளது

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்